**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 155/2015**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 10 |
| Name (திரு/திருமதி) | : செல்வராஜ் |
| Father's Name/ Husband's Name | : கருப்பையா |
| Village & Taluk | : பாளையங்கோட்டை |
| Calling | : பேராசிரியர் |
| Age | : 71 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2026**

**இந்த அரசு தரப்பு சாட்சி காணொலி மூலமாக விசாரிக்கப்பட்ட அவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் இருந்து சாட்சியம் அழித்தார். மேற்படி சாட்சியை மேற்படி நீதிமன்றத்தின் இளநிலை உதவியாளர் திரு.இசக்கிமுத்து என்பவர் அவரது ஆதார் அட்டையின் நகலை வைத்து அடையாளப்படுத்தினார்.**

எதிரி ஆஜர் இல்லை.( கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் வேலூர் மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சட்டம் சார்ந்த துறையில் பேராசிரியராக பணி செய்து 2014 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 23.02.2014 அன்று மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்த போது வளத்தி காவல் நிலைய குற்ற எண்.31/2014 என்ற வழக்கில் தொடர்புடைய திருமதி. ஜெயா வ–38 வயது மதிக்க தக்க பெண் பிரேதத்தினை மு.நி காவலர் 2143 திரு. சதிஷ்குமார் என்பவர் வேண்டுகோள் கடிதத்தின் மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஒப்படைத்தார். பிரேத பரிசோதனையை மாலை 3.55 மணியளவில் தொடங்கினேன். பிரேதத்தின் மீதும் பிரேதத்தின் உள்ளும் காணப்பட்ட விவரங்களை விரிவாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பிரேத பரிசோதனையின் முடிவில் இறந்த நபர் சுமார் 12 மணி நேரத்திற்கு முன்பாக இறந்து இருக்க கூடும் எனவும் இறந்த நபர் அவரது தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்து இருக்க கூடும் என கருத்து தெரிவித்து சான்று

வழங்கினேன். மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்த நபர் உயரமான பகுதியில்இருந்து கீழே விழும் போது கரடுமுரடான பகுதியில் விழுந்திருந்தால் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் மருத்துவமனையில் எனது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். தேதி நினைவில் இல்லை. எனக்கு அழைப்பாணை சார்வு செய்து விசாரிக்கவில்லை. காவலர்கள் நான் சொன்னதை என் முன்னிலையில் வாக்கு மூலமாக கையால் எழுதி பதிவு செய்து கொண்டனர்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.